# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## 2006 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம்

*(2006 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*2006, திசெம்பர் மாதம் 01 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா** **தபாற் செலவு : ரூபா**

**2006 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம்**

[*2006 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*.]

*ச.வ—ஓ. 47/2006*

**வங்கித்தொழிற் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப் பெயர்.*

***1***. இச்சட்டம் 2006 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின் 76க என்னும் பிரிவைத் திருத்துதல்.*

***2***. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தெட்டாம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின் 76க என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், அதன் (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :—

"(i) வங்கியானது, ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் இலங்கையினுள் கூட்டிணைக்கப்படுமிடத்து அல்லது தாபிக்கப்படுமிடத்து, —

(அ) வங்கியின் கட்டாய ஒடுக்குகைக்கான வழக்கு நடவடிக்கைகள் தொடங்கப்படுதல் வேண்டுமென்பதுடன், VIII ஆம் பாகத்தின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், அத்தகைய ஒடுக்குகைக்கும் அது தொடர்பாகவும் ஏற்புடையனவாதலும் வேண்டும் ; அல்லது

(ஆ) பணச்சபையானது, வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள் முரணாகவுள்ளமை எவ்வாறிருப்பினும், வைப்பீட்டாளர்களின் நலன்கருதியும் நிதித்துறையின் நிலையுறுதியை உறுதிப் படுத்துவதற்கான அவசியத்தைக் கருத்

திற் கொண்டும், இவ்வுட்பந்தி நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் ஏதேனும் நேரத்தில் எந்த வங்கியின் உரிமம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் வங்கி தொடர்பில் (இதனகத்துப்பின்னர் "செலுத்தத்தவறுகின்ற வங்கி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அத்தகைய வங்கி, இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் கொண்டு நடாத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டதான தொழிலாகவுள்ள, அல்லது பணச்சபை தீர்மானிக்கக்கூடியவாறான அதன் அத்தகைய பாகமாக உள்ளதான அத்தகைய வங்கியினால் கொண்டு நடாத்தப்படும் அத்தொழிலை உரித்தாக்குவதற்குச் சம்மதிக்கின்றதான விடயத்துக்கேற்ப, (இதனகத்துப்பின்னர் "கொள்ளுகின்ற வங்கி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஓர் அரச வங்கிக்கு அவ்வாறு உரித்தாக்கலாம், சபையானது, அத்தகைய உரித்தாக்கல்பற்றிச் செலுத்தத் தவறுகின்ற வங்கிக்கும் கொள்ளுகின்ற வங்கிக்கும் அறிவிக்கச் செய்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறியினும், சொல்லப்பட்ட ஆறுமாத காலப்பகுதியினுள் செலுத்தத் தவறுகின்ற வங்கியொன்றை ஒடுக்குவதற்கான வழக்கு நடவடிக்கைகளைத் தொடங்கியிருந்த பணச்சபை, அத்தகைய வங்கியின் தொழிலை அல்லது அத்தகைய அரச வங்கிக்கு மேற்கூறப்பட்ட முறையில் பின்னர் உரித்தாக்குவது அதற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :

ஆயின் மேலும், உரிமமளிக்கப்பட்ட விசேடத்துவ வங்கியொன்றின் உரிமம் இவ்வுட்பந்தி நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் ஏதேனும் நேரத்தில் பணச்

சட்டத்தின் 30(10)(ஆ)(i) என்னும் பிரிவின் நியதிகளின்படி இல்லாதொழிக் கப்பட்டிருக்குமிடத்து இவ்வுட்பந்தியின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் அதற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

உட்பந்தி (ஆ) என்பதன் நோக்கத்திற்கு—

"அரச வங்கி" என்பது பெரும்பான் மைப் பங்குமூலதனம் அரசாங் கத்தினாற் சொந்தமாக வைத் திருக்கப்படுகின்ற அல்லது அதன் பணிப்பாளர் சபையு றுப்பினர்களுள் பெரும்பான் மையோர் அரசாங்கத்தினால் நியமிக்கப்படுகின்ற 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித் தொழிற் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் உரிமம ளிக்கப்பட்ட வர்த்தக வங்கி அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேடத்துவ வங்கி என்று பொருள்படும்."; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலமும் :—

" (3அ) மூன்றாம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, "செலுத்தத் தவறுகின்ற வங்கியொன்றினால் கொண்டு நடாத்தப்படும் தொழில்" என்பது —

(அ) (காசு மீதிகள், ஒதுக்கு நிதிகள், முதலீடு கள் மற்றும் வைப்புக்கள் உட்பட) இயை பான தேதிக்கு முற்போந்த நாளன்று செலுத்தத் தவறுகின்ற வங்கியினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட எல்லா அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை யும் ;

(ஆ) இயைபான தேதிக்கு முற்போந்த நாளன்று செலுத்தத்தவறுகின்ற வங்கியினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்திலான அல்லது அதிலிருந்து எழுகின்ற எல்லா உரிமைகளையும், தத்துவங்களையும், சிறப்புரிமைகளையும், அதிகாரங்களையும், அக்கறைகளையும் ;

(இ) இயைபான தேதிக்கு முற்போந்த நாளன்றுள்ளவையும் செலுத்தத்தவறுகின்ற வங்கியினதுமான எல்லாப் பொறுப்புக்களையும் ; அத்துடன்

(ஈ) இலங்கையிலுள்ள அத்தகைய பொறுப்பு முயற்சி தொடர்பான அல்லது சம்பந்தமான எல்லாப் புத்தகங்களையும், கணக்குகளையும், ஆவணங்களையும்,

உள்ளடக்கும்.

(3ஆ) பிரிவு 76க என்பதன் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியானது (1) ஆம் உட்பந்தியின் நியதிகளின்படி செலுத்தத் தவறுகின்ற வங்கியினாற் கொண்டு நடாத்தப்படும் தொழில் எத்தேதியன்று கொள்ளுகின்ற வங்கிக்கு உரித்தாக்கப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து பயனுறுவதாக —

(அ) செலுத்தத்தவறுகின்ற வங்கியின் உரித்தாக்கப்பட்ட தொழில் சம்பந்தமானவையும், அல்லது தொடர்பானவையும், இயைபான தேதிக்கு நேர்முந்திய நாளன்று உளதாயுள்ளவையும் அல்லது பயனுள்ளவையும், செலுத்தத் தவறுகின்ற வங்கி அவற்றுக்குத் திறத்தவராகவுள்ளதும் அல்லது செலுத்தத் தவறுகின்ற வங்கியின் பெயரிலானவையுமான

எல்லா ஒப்பந்தங்களும், உறுதிகளும், முறிகளும், உடன்படிக்கைகளும், அற்றோணித் தத்துவங்களும், சட்டப் பிரதிநித்துவ அளிப்புக்களும் மற்றும் எத்தன்மையனவுமான வேறு சாதனங் களும், இயைபான தேதியிலிருந்து பயனு றுவதாக கொள்ளுகின்ற வங்கியினால், விடயத்துக்கேற்ப, செய்து கொள்ளப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட ஒப்பந்தங்க ளாக, உறுதிகளாக, முறிகளாக, உடன் படிக்கைகளாக, அற்றோணித் தத்துவங் களாக, சட்டப் பிரதிநிதித்துவ அளிப்புக் களாக அல்லது வேறு சாதனங்களாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) செலுத்தத் தவறுகின்ற வங்கியின் உரித்தாக்கப்பட்ட தொழில் சம்பந்தமாக அல்லது தொடர்பாகச் செலுத்தத் தவறு கின்ற வங்கியினால் அல்லது அதற்கெதி ராகத் தொடுக்கப்படுகின்றவையும், இயை பான தேதிக்கு நேர்முந்திய நாளன்று முடிவுறாதிருக்கின்றவையுமான எல்லா வழக்குகளும், எத்தன்மைத்தான வழக்கு நடவடிக்கைகளும், கொள்ளுகின்ற வங்கி யினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக் கப்படுகின்ற வழக்குகளாகவும் வழக்கு நடவடிக்கைகளாகவும் இயைபான தேதி யிலிருந்து கருதப்படுதல் வேண்டுமென் பதுடன், அதற்கிணங்கத் தொடர்ந்து நடாத்தவும் படலாம் அல்லது மேற் கொள்ளவும்படலாம்.

(3இ) (அ) இச்சட்டத்தில் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், கொள்ளுகின்ற வங்கிக்கு உரித்தாக்கப்பட்ட செலுத்தத் தவறுகின்ற வங்கியின் பொறுப்புக்களின்மீது கடன்கொடுத்தோரினதும் வைப்பீட்

டாளர்களினதும் உரிமைக் கோரிக்கைகளையும், கோரிக்கை களையும் ஈடுசெய்வதற்குக் கொள்ளுகின்ற வங்கிக்குள்ள பொறுப்பானது, செலுத்தத் தவறுகின்ற வங்கியின் தொழிலை மீளாய்வதன் மேல் பணச்சபையினால் வகுத்தமைக்கப்பட வேண்டியவொரு திட்டத்தின் நியதிநிபந்தனைகளுக்கிணங்கவும், மற்றும் அத்தகைய திட்டத்தில் தரப்பட்டுள்ள அளவுவரை மட்டும், இருத்தல் வேண்டும். அத்திட்டமானது வகுத்தமைக்கப் படுவதன்மீது பணச்சபையானது, அத்திட்டத்தை முறையே, சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தினசரிச் செய்தித்தாள் ஒன்றில் வெளியிடச் செய்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், கொள்ளுகின்ற வங்கியின் எழுத் திலான சம்மதத்துடன் அத்தகைய திட்டத்தைக் காலத்துக்குக் காலம் மாற்றுதல், வேறுபடுத்துதல் அல்லது திரிபுபடுத்துதல் பணச்சபைக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். விடயத்துக் கேற்ப, அத்தகைய ஏதேனும் மாற்றம், வேறுபடுத்துகை அல்லது திரிபுபடுத்துகை முறையே, சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தினசரிச் செய்தித்தாள் ஒன்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட திட்டம் —

(i) செலுத்தப்படற்பாலனவான தொகைகளும், கொடுப் பனவுகள் செய்யப்படவேண்டிய நேரங்களும் உட்பட, கொள்ளுகின்ற வங்கியினால் செலுத்தத்தவறுகின்ற வங்கியின் பொறுப்புக்களைக் கொடுத்துத்தீர்க்கும் முறையைக் குறித்துரைக்கலாம் ;

(ii) கொள்ளுகின்ற வங்கிக்கு உரித்தாக்கப்பட்ட செலுத்தத் தவறுகின்ற வங்கியின் வெவ்வேறு வகுப்பினவான பொறுப்புக்களைக் கொடுத்துத்தீர்ப்பதற்கான முன் னுரிமைக் கிரமமொன்றுக்கு ஏற்பாடு செய்யலாம் ;

(iii) கொடுப்பனவுகளின் அளவை, செலுத்தத் தவறு கின்ற வங்கியின் ஏதேனும் வகுப்பினரான அல்லது வகுதியினரான வைப்பீட்டாளர்களுக்கு அல்லது கடன்கொடுத்தோருக்கு, வரையறுக்கலாம் ;

(iv) வைப்புப் பொறுப்புக்களின் மீள் அட்டவணைப் படுத்தலுக்காக ஏற்பாடு செய்யலாம் ;

(v) பொறுப்புக்களைக் கொடுத்துத் தீர்த்தலானது, செலுத்தத்தவறுகின்ற வங்கியின் சொத்துக்களினது தொகைக்கு அல்லது பணச்சபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு சொத்துக்களுக்கு வரையறுக்கப்படுதல் வேண்டுமெனக் குறித்துரைக்கலாம்.

(3ஈ) இச்சட்டத்தில் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இதன் (3இ) என்னும் உட்பிரிவின் நியதிகளின்படி பணச்சபையினால் வகுத்தமைக்கப்பட்ட திட்டமொன்றின் நியதிநிபந்தனைகளுக் கிணங்கப் பொறுப்புக்களைக் கொடுத்துத் தீர்த்தலானது, கொள்ளுகின்ற வங்கிக்கு உரித்தாக்கப்பட்ட செலுத்தத்தவறுகின்ற வங்கியின் பொறுப்புக்களை இதன்கண் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அழித்தொழித்தல் வேண்டும்.

(3உ) பணச்சபையானது, (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i) (ஆ) என்னும் உட்பந்தியின் கீழ்க் கட்டளையொன்றை ஆக்குகையில், பணச்சபையினால் வகுத்தமைக்கப்பட்ட திட்டத்தின் நியதிகளின்படி கொள்ளுகின்ற வங்கியின்மீது சுமத்தப்பட்ட கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அதற்குள்ள ஆற்றலைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டுமென்பதுடன், கொள்ளுகின்ற வங்கி அத்தகைய திட்டத்துக்கு இணங்கியொழுகுவதற்கு விரும்புகிறதென எழுத்தில் அறிவிக்கும்படி அதனைத் தேவைப்படுத்தலும் வேண்டும்.

(3ஊ) அமைச்சரானவர், தேசியப் பொருளாதாரத்தின் நலன்கருதி அவ்வாறு தீர்மானித்தல் அவசியமானதாகவுள்ளவிடத்து, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், மேற்கூறப்பட்ட ஏற்பாடுகளின் நியதிகளின்படி கொள்ளுகின்ற வங்கியொன்றிற் குரித்தாக்கப்பட்டுள்ளவையும், ஏதேனும் அரசாங்க நிறுவனம், மாகாணசபை அல்லது மாகாணசபையின்கீழ் பணியாற்றுகின்ற வேறு குழு அல்லது அதிகாரசபை, ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது வேறு பகிரங்க நிறுவனம் அல்லது உள்ளூரதிகாரசபை என்பவற்றுக்கானவையுமான

செலுத்தத் தவறுகின்ற வங்கியொன்றின் எவையேனும் வைப்புப் பொறுப்புக்கள், அல்லது அத்தகைய பொறுப்புக்களின் ஏதேனும் பாகம், அரசாங்கத்துக்கான பொறுப்புக்களாகவிருத்தல் வேண்டுமெனத் தீர்மானிக்கலாம்.

(3எ) உட்பிரிவுகள் (3அ) மற்றும் (3ஆ) என்பவற்றின் நோக்கங்களுக்காக, "இயைபான தேதி" என்பது, (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i) (ஆ) என்னும் உட்பந்தியின் நியதிகளின்படி செலுத்தத்தவறுகின்ற வங்கி எத்தேதியன்று கொள்ளுகின்ற வங்கிக்கு உரித்தாக்கப்படுகின்றதோ அத்தேதியெனப் பொருளாகும்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்